[முற்பகல் 10.30]

2, தகவல்கோரல்

கூட்டுறவுக் கடன் வசூலில் ஜப்தி நடவடிக்கை.

திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் மாண்புமிகு ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள், கூட்டுறவுக் கடன் ஜப்தி செய்வது சம்பந்தமாக மதுரையில் பத்திரிகைக்கு நேற்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே மத்திய அரசு ஜப்தி செய்யச் சொல்லவில்லை, ஜப்தி செய்யாமலேயே வசூலிக்கலாம் என்பது மட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அரசு நிர்ப்பந்திக்காவிட்டால் ஜப்தி செய்யாமல் நிறுத்தி இருக்கலாம், ஜப்தி நடவடிக்கையை நிறுத்தலாம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதாக மாண்புமிகு கூட்டுறவு துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் வேறுவிதமாக சொல்லி இருக்கிறார்கள். எனவே நான் கேட்கவிரும்புவது, மத்திய அரசு என்னதான் சொல்லியிருக்கிறது என்பதையும், என்ன அறிக்கையை அனுப்பி இருக்கின்றது என்பதையும் இந்த அவையிலே எங்களுக்கு எல்லாம் தெரியக் கூடிய முறையிலே வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதோடு, இந்தக் கூட்டுறவு சம்பந்தமாக ஜப்தி போன்ற நடவடிக்கைகளை இன்று அவர்கள் சொல்லிச் செய்கிறீர்களா அல்லது நீங்களே செய்கின்றீர்களா என்று ஒரே குழப்பமாக இருக்கின்ற காரணத்தினால், இது சம்பந்தமாக தெளிவான நிலைமையை உண்மையை இந்த அவைக்கு தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றி இன்று காலையிலே ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை எடுத்துக் கொள்ள இருக்கிறேன்: (குறுக்கீடு) கொடுத்த உறுப்பினர்களை கேட்டுவிடுகிறேன். அவர்கள் ஏற்றுக்கொண்டால் நீங்கள் பதில் சொல்லலாம். நான் அதை நாளைக்கு எடுத்துக் கொள்வதாக இருக்கிறேன். (குறுக்கீடு) அது வேறு, இது வேறு.

** ** **

இன்று காலையிலே கொடுத்தார்கள். அதை எடுத்துக் கொள்ள வேண்டுமா வேண்டாமா என்று சொல்லுங்கள். அதற்கு இன்றைக்கே அமைச்சர் பதில் சொல்லிவிட்டால் பிரச்சினை தீர்ந்து விடும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இதுகுறித்து நேற்றே கொடுத்திருக்கிறோம். இது குறித்து விரிவாகப் பேசி அமைச்சர் பதில் சொன்னால்தான் சரியாக இருக்கும். தயவு செய்து இதை நாளைக்கே எடுத்துக் கொண்டால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு எடுத்து கொள்ளப் படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே,

** **

என்று சொல்லி இருக்கிறீர்கள், தயவு செய்து அதை நீக்கிவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க வகற்றப்பெற்றது.

1982 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** ** என்ற வார்த்தைகள் நீக்கப்படுகின்றன.

(ஆ) அரசு அலுவலர்களின் பதவிக்கால நீட்டிப்பு

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகளுடைய பதவிக் காலம் நீட்டிப்பு கிடையாது. அந்த உரிய காலம் முடிந்த உடன் அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவர்கள் என்ற நிலைதான் என்னுடைய ஆட்சியிலே நிலைநிறுத்தப்படும் என்று சொன்னார்கள். ஆனால் எக்சைஸ் கமிஷனர் சுப்பிரமணியம் அவர்களுடைய பதவிக்காலம் முடிந்தும் அவர் மீண்டும் ரி-எம்ப்ளாய்மெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கொள்கைப் பிரச்சினை. பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருச்சி மாவட்டத்தில் சூறைக் காற்றினால் வாழைகளுக்கு ஏற்பட்ட சேதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், பி. எம். தங்கவேல்ராஜ், பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர், "திருச்சி மாவட்டம், தொட்டியம் பகுதியிலும், நத்தம், காடுவெட்டி, சீனிவாசநல்லூர், ஏரிக்குளம் மற்றும் பல்வேறு பகுதிகளில் 27—3—82 அன்று வீசிய சூறைக் காற்றினால் சுமார் 200 ஏக்கருக்குமேல் வாழைகள் அழிந்து ரூபாய் 10 இலட்சத்திற்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு உடன் நிவாரணம் அளிக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. இரெ. இராசமாணிக்கம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27—3—1982 அன்று திருச்சி மாவட்டத்திலே, தொட்டியம் பகுதியிலும், இன்னும் அதனுடைய சுற்றுப் பகுதியிலும் அடித்த சூறைக்காற்றினால், அந்தப் பகுதியிலுள்ள 200 ஏக்கருக்கு மேல் பயிரிட்டுள்ள வாழைகள் அழிந்து, சுமார் 10 லட்சம் ரூபாய் அளவிற்கு சேதம் எற்பட்டு இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. தொட்டியம், நத்தம், காடுவெட்டி, சீனிவாச நல்லூர், ஏரிகுளம், மேடு மகாதானபுரம், குளித்தலை மற்றும் அதனுடைய சுற்றுவட்டாரங்களில் இப்படிப்பட்ட ஒரு கொடிய சூறைக்காற்றினால் பெரிய சேதம் வாழைப்பயிர்களுக்கு விவசாயிகளுக்கு ஏற்பட்டு இருப்பதாக தகவல் தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.